ஒஎஸ்.எண்.20/12 அய்யம்மாள் (வா.சா.1)

குறுக்குவிசாரணைதொடர்ச்சி (10வது பிரதிவாதி தரப்பில்)21.01.2019

பிராது தபசில் சொத்து ராமசுப்பு நாயக்கருக்கு பாத்தியப்பட்டதை காட்டுவதற்கு பட்டாவை தவிர்த்து வேறு எந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். எனக்கு இரண்டு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளையும்வாரீசுகளும் ஆவார்கள். 2ம் வாதிக்கு 3 ஆண்மக்கள் இருக்கிறார்கள். 3ம் வாதிக்கு 3 ஆண்மக்கள் வாரீசுகள் ஆவார்கள். 2ம் வாதி ராமலட்சுமியின் ஒரு ஆண்வாரீசுக்கு திருமணமாகியுள்ளது. 3ம் வாதியின் வாரீசுகளில் 2 ஆண்வாரிகளில் திருமணம் ஆகியுள்ளது. எனது கணவர் எங்கு எல்லாம் பணியாற்றி வந்தாரோ அங்கெல்லாம் நான் அவருடன் வசித்து வந்தேன் என்றால்சரியல்ல. சங்கரன்கோவிலில் 6வருடம் கடையநல்லூரில் 3 வருடம், பாவூர்சத்திரம் 2 வருடம், தேவகோட்டையில் 1-1/2வருடம் ஆகிய காலங்களில் நான் எனதுகணவருடன் மேற்கண்ட இடங்களில் வசித்து வந்தேன். 2ம் வாதியின் கணவர் நிலஅடமானவங்கியில் லேண்ட் வேலியூசன் ஆபீசராக வேலைபார்த்து வந்தார். 2ம் வாதியின் ராமலட்சுமியின் கணவர் எங்கு எல்லாம் வேலைபார்த்தார் என்று எனக்கு தெரியாது. 3ம் வாதியின் கணவர் விவசாய வேலைசெய்து வருகிறார். 1,2 பிரதிவாதிகள் எனது உடன்பிறந்த காலஞ்சென்ற வெங்கடசாமி நாயக்கர் பிள்ளைகள் ஆவார்கள். 4ம் பிரதிவாதி எனது சகோதரரின் மனைவி என்றால் சரிதான். 5,6 பிரதிவாதிகள் எனது சகோதரர் காலஞ்சென்ற கோபால்சாமியின் பிள்ளைகள் என்றால்சரிதான். அய்யப்பன், எல்லப்பன், திருப்பதி, சுப்பாராமன் என் உடன் பிறந்த சகோதரர்கள் ஆவார்கள்.ஏ.என்.ஏ அய்யப்பநாயக்கருக்கு இரண்டு தாரம் என்றால்சரிதான். எனது தாயார் உயிருடன் இருக்கும்போது யாருக்காவது கிரைய ஆவணமோ, அல்லது கிரையஒப்பந்தமோ எழுதிகொடுத்தாரா என்றால் சுயநினைவு இல்லாதபோது மோசடியாக உருவாக்கப்பட்டது. இந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் காணப்படும் புகைபடத்தில் உள்ள நபர் எனது தாயார் ஆவுடைத்தாயம்மாள் என்றால்சரிதான். ஆனால் என் தாயார் சுயநினைவு இல்லாமல் இருக்கும்போது மேற்படி செட்டில்மெண்ட் எழுதி உருவாக்கிகொண்டார்கள். அப்பாவின் உதவுடன்தான் 2009ல் இருந்து வந்தார்.

கு.வி. தொடர்ச்சிக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு

செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)A.K.பாபுலால்,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.